மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள். உங்களுடைய கஷ்டம் எல்லாம், சோகக் கதைகள் எல்லாம் தெரியும். புதுக்கோட்டை மாவட்ட மக்களுடைய கஷ்டம் ரொம்ப சோகமான கதை தான். அதை நீங்கள் இன்னும் சோகப்படுத்திச் சொல்ல வேண்டாம். கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. சி. சுவாமிநாதன் : எனவே, அந்த சோகத்தைப் போக்குகின்ற வகையில் நபார்டு அல்லது உலக வங்கி நிதி ஆதாரத்தோடு திறந்தவெளிக் கிணற்றுக்குள் ஆழ்துளைக் கிணறுகளை அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை கவனத்தோடு இந்த அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 430, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

430—

பத்திரிகை நிருபர்களுக்கு சலுகை விலையில் வீட்டுமனை.

*5052— திரு. கே. கந்தசாமி :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாவட்டத் தலைநகரங்களில் உள்ள பத்திரிகை நிருபர்களுக்கு சலுகை விலையில் வீட்டுமனை ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

(அ) மற்றும் (ஆ) : மாவட்டத் தலைநகரங்களில் உள்ள பத்திரிக்கை நிருபர்களுக்கு சலுகை விலையில் வீட்டுமனை ஒதுக்கீடு செய்வதற்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய மனை ஒதுக்கீடு விதிகளில் வழிவகைகள் இல்லை. மேற்கண்ட பொருள் பற்றிய கருத்துரு ஏதும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பரிசீலனையில் இல்லை.

1992 ஏப்ரல் 1]

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகளில் பத்திரிக்கை நிருபர்களுக்கு 3 சதவீதம் ஒதுக்கீடு செய்யலாம் என்று அரசு ஆணை இருந்தும் அந்த ஆணையை அமல் படுத்தாமல் வீட்டு வசதி வாரிய அதிகாரிகள் புறக்கணிக்கிறார்கள். நிருபர்களின் பணியின் தன்மையைக் கருதி மையப் பகுதியில் உள்ள குடியிருப்பு களில் ஒதுக்கீடு செய்யவும் 3 சதவீதம் கண்டிப்பாக அமல் படுத்தவும் அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர்க்கிங் ஜெர்னலிஸ்டுக்கு ஒதுக்கப்பட்டு இருக்கின்ற அந்த ரிசர்வேஷன் முறையாகப் பயன் படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக ஏதேனும் புகார்கள் இருப்பின் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரி வித்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிக்கை நிருபர்கள், மேலாளர்கள், செய்தி ஆசிரியர்களுக்கு முன்னுரிமைக் கொடுத்து ஒதுக்கீடு செய்யப் படுமா? இவர்களைத் தவிர பத்திரிக்கையாளர் என்ற பெய ரில் வேறு நபர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுவது தடுக்கப்படு மா என அறிய விரும்புகிறேன். மேலும் புதிய குடியிருப்புகள் ஏற்படுத்துகின்றபோது பத்திரிகையாளர்களுக்கு சலுகை விலை யில் வீட்டுமனைகள் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வீட்டுவசதி வாரி யம் வீட்டு வசதிக்காக நிலத்தை கையகப்படுத்திய பிறகு சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் வாயிலாகவோ, அல்லது இயக்குநர், டி.டி.பி. அவர்கள் வாயிலாகவோ, நிலம் வீட்டுமனைகளாகப் பிரிக்கப்படுவதற்கு அனுமதி பெறப்படு கிறது. அப்படி வீட்டுமனைகளாகப் பிரிக்கப்பட்ட பிறகு மொத்தம் பிரிக்கப்பட்ட வீட்டு மனைகளில் 85 சதவீதம் வீட்டுவசதி வாரியத்தால் குலுக்கல் முறையிலே ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அந்த 85 சதவீதத்திலே 3 சதவீதம் ஏற்கனவே பத்திரிக்கைத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு ஒதுக்கப் படுகிறது. அந்த 3 சதவீதமும் முறையாகக் கடைபிடிக்கப் பட்டு வருகிறது. குறிப்பாக ஏதேனும் புகார்கள் இருப்பின் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்கை கோவிந்த ராசு.

[1992 ஏப்ரல் 1

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகை நிருபர்களுக்கு அரசு குடியிருப்புகளில் வீடு ஒதுக்கப்படவேண்டுமென்று கேட்பவர்களுக்கு ஒதுக்கப்படாமல் காலதாமதம் ஏற்படுகிறது என்பதைத் தவிர்க்க, அவர்களுக்கு விரைவாக வீடுகள் ஒதுக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்டு, இன்றைய தினம் தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அன்போடு அறிக்கையாகப் பத்திரிகையிலே பேரவைத் தலைவர். . . . . (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணை வினாவாகக் கேளுங்கள்.

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை அமைச்சராக இன்றைய தினம் அறிவித்து இருக்கக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி சொல்லி, பத்திரிகையிலே படித்த இந்தச் செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு, இந்த வினாவுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடை அளிப்பாரா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. அவருடைய துணை வினா, உரிய, பொருந்தமுள்ள வினாவாக இல்லாததால் குறுக்கீடு. . . .

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். . . .

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அமைச்சர் ஆக்கப்பட்டிருக்கிறார் என்று உறுப்பினர் சொல்கிறார். இது உண்மையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு ஏப்ரல் ஒன்றாம் தேதி என்கிற காரணத்தினாலே இத்தனை பேர் எழுந்து பாவம் ஒருவரைக் கேட்கிறீர்கள். யாராவது ஒருவருக்கொருவர் ஏப்ரல் 1- ஆம் தேதி ஆக்கிக்கொள்வதுதான் ஏப்ரல் 1- ஆம் தேதிக்குரிய சிறப்பு. எல்லோரும் சேர்ந்து ஒருவரை ஆக்கக்கூடாது.

1992 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகை துறையைச் சார்ந்தவர்களுக்கு வீட்டுவசதி வாரியத்தால் ஒதுக்கப்படுகின்ற விழுக்காடுகள் முறையாக ஒதுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, ஏதேனும் புகார் இருந்தால், அப்படி ஒதுக்கப்படவில்லை என்று சொன்னால், அது துறையினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 431, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், இருக்கையில் இல்லை.

வினா எண். 432, திரு. ம. தனபால், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

432—

இல்லளூர் ஆதிதிராவிட மாணவர்களுக்கு ஓராசிரியர் பள்ளி.

*4836—திரு. ம. தனபால் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருப்போரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இல்லளூர் ஆதிதிராவிடர் காலனியில் வசிக்கும் பள்ளி மாணவர்களுக்கு ஓராசிரியர் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஓராசிரியர் பள்ளி அமைப்பு தற்போது அமலில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ம. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட இந்த இல்லளூர் பகுதி ஆதி திராவிட மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதி. அந்தப் பகுதியிலே கிட்டத்தட்ட ஆயிரம் மக்கள் தொகைக்கு மேல்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS